Australian Government
Department of Human Services

# கடனைத் தவிர்த்தல்

## என்னுடைய சந்தர்ப்ப சூழல்கள் மாறினால் நான் என்ன செய்வது?

நீங்கள் ஒரு Centrelink பணமளிப்பைப் பெற்றால், நீங்கள் எங்களிடம் உங்களது வருமானம் மற்றும் உங்களது சந்தர்ப்ப சூழல்களில் ஏற்பட்டுள்ள ஏதேனும் மாற்றங்கள் குறித்து எங்களிடம் தெரிவிக்க வேண்டும். இதன்மூலம் உங்களுக்கு சரியான தொகை அளிக்கப்படுகிறது, மேலும் உங்களுக்கு அதிக தொகை செலுத்தப்படவில்லை என்பதை எங்களால் உறுதிசெய்ய முடியும்.

**குறிப்பு:** வேண்டுமென்றே தவறான தகவலை வழங்குவோர், சட்டரீதியான வழக்குத் தொடுப்புக்கும் குற்றப்பதிவுக்கும் ஆளாகும் அபாயமுள்ளது. அரசாங்கத் துறையினர் முதலாளிகளுடன் வருமானத்தை சரிபார்த்து, Australian Taxation Office, Department of Home Affairs, பிற அரசு முகாமைகள் மற்றும் வேலை வாய்ப்புச் சேவைகளை அளிக்கும் தொழில் வழங்குநர்களால் வழங்கப்படும் தகவல்களை இணைத்துப் பார்த்து உறுதிபடுத்துகிறார்கள்..

## வருமானம்

பின்வருபவை பற்றி எங்களிடம் கூறுங்கள்:

- நீங்கள் வேலையில் சேர்ந்தால் அல்லது நின்றால்
- நீங்கள் வேலை செய்யும் மணிநேரங்கள் மற்றும் இந்த பணிநேரங்களில் ஏற்படும் மாற்றங்கள்
- வேலையானது முழுநேர, நாட்பணி அல்லது பகுதிநேர வேலையானால்
- வரி மற்றும் பிற கழிவுகளுக்கு முன்னர் உங்களது ஊதியம்/வருமானம்
- ஆஸ்திரேலியாவுக்கு வெளியிலிருந்து உங்களுக்கு கிடைக்கும் ஏதேனும் வருமானம், அல்லது
- வரி விதிப்பிற்கு முன்னர், உங்கள் வாழ்க்கைத்துணையின் ஊதியம்/வருமானம் (உங்களுக்கு வாழ்க்கைத்துணை இருக்கும் பட்சத்தில்).

## சுய-வேலை செய்பவர்

பின்வருபவை பற்றி எங்களிடம் கூறுங்கள்:

- நீங்கள் சுயமாக வேலை செய்பவராக இருந்தால், அல்லது ஒரு வணிகம் அல்லது நிறுவனத்தில் ஈடுபட்டிருந்தால்
- நீங்கள் முன்பு எங்களிடம் கூறியதிலிருந்து உங்கள் வணிகம் அல்லது நிறுவனத்தின் வருமானம் மாறினால் (வழக்கமாக, வருடாந்திர வருமான வரியை நீங்கள் தாக்கல் செய்யும் போது இதை அறியமுடியும்)
- நீங்கள் ஒரு அறக்கட்டளையின் பயனாளராக இருந்தால் (குடும்ப அறக்கட்டளை உள்பட), அல்லது

- உங்களது முந்தைய ஆண்டின் வரி விதிப்பிற்கான வருமானம் அதிகரித்தால் அல்லது குறைந்தால்.

நீங்கள் வருமான வரியைத் தாக்கல் செய்யும் வரை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை (அல்லது எங்களால் வேறுவிதமாக அறிவுறுத்தப்படும் போதெல்லாம்) நடப்பு Profit and Loss Statements-ஐ சமர்ப்பிக்கவேண்டும்.

**குறிப்பு:** உங்கள் சுய-மேற்கோளுக்காகவும் எமது மீளாய்வு மற்றும் சரிபார்ப்பு நோக்கங்களுக்காகவும் உங்கள் அனைத்து சம்பளச்சீட்டுக்களையும் பத்திரமாக வைக்கவும்.

நீங்கள் உழைக்கும் வயதில் பணம் பெற்றிருந்தால், அதிலிருந்து பெறும் ஒரு 10% அபராதத் தொகை, Recovery Fee (மீட்புக் கட்டணம்) என அழைக்கப்படுகிறது, இது நீங்கள் கூடுதலான பணம் பெற்றிருந்தால், உங்கள் வருமானம் பற்றி எங்களிடம் கூறவில்லை அல்லது தெரிந்தே தவறான அல்லது தவறான தகவலை வழங்கியுள்ளீர்கள் என்றால் பொருந்தும்.

## உங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள்

பின்வருபவை பற்றி எங்களிடம் கூறுங்கள்:

- உங்கள் முகவரியில் ஏற்படும் மாற்றங்கள்
- உங்கள் திருமணம், நீங்கள் திருமணம் போன்ற உறவுமுறையில் வாழத் துவங்குகிறீர்கள், தனித்து வாழ்கிறீர்கள் அல்லது உடன்பட்டு வாழ்கிறீர்கள்
- நீங்கள் செலுத்தும் வாடகைத்தொகை அல்லது நீங்கள் தங்குமிடத்திற்கான தொகையில் ஏற்படும் மாற்றம்
- நீங்கள் தற்காலிகமாக, நிரந்தரமாக ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேறுகிறீர்கள் அல்லது கல்விபயில வெளிநாடு செல்கிறீர்கள்
- குழந்தைகள் உங்கள் பராமரிப்பிருந்து வெளியேறுகின்றனர் அல்லது உங்கள் பராமரிப்பின் கீழ் வருகின்றனர்
- உங்கள் குழந்தைப் பராமரிப்பு ஏற்பாடுகளில் நிகழும் மாற்றம்
- உங்கள் குழந்தை அனுமதிக்கப்பட்ட வரம்பை விட அதிகமாக வருமானம் ஈட்டுகிறார் (வரம்பு என்னவென்று எங்களிடம் கேட்கவும்)
- நீங்கள் ஒரு பெருந்தொகையைப் பெறுகிறீர்கள்
- விடுப்பு எடுத்துக்கொண்டமைக்காக நீங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத்துணை பெற்ற தொகை அல்லது பெறப்பட்ட மிகைத்தொகை
- வேறு ஏதேனும் வழியில் நீங்கள் வருமானத்தை ஈட்டுகிறீர்கள்
- உங்கள் சொத்துக்களில் ஏற்படும் மாற்றம்

- உங்களது பராமரிப்பு ஏற்பாடுகள் மாறுகின்றன அல்லது நிறுத்தப்படுகின்றன (ஒரு கவனப்பாளராக நீங்கள் எங்களிடமிருந்து பணம் பெறுகிறீர்கள் என்றால்), அல்லது
- உங்கள் குழந்தை கல்வி பயில்வதை நிறுத்திவிட்டால்.

## நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டிய மற்ற விஷயங்கள்

**நீங்கள் ஒரு மாணவரா?**

நீங்கள் மாணவராக இருந்தால், பின்வருபவை பற்றி எங்களிடம் கூறவேண்டும்:

- கல்வி பயில்வதை நிறுத்திவிட்டால்
- நீங்கள் படிக்கும் நேரத்தின் அளவில் ஏற்படும் மாற்றம்
- பாடப்பிரிவுகளில் ஏற்படும் மாற்றம்
- கல்வி ஸ்தாபனங்களில் ஏற்படும் மாற்றம், அல்லது
- உங்கள் பாடப்பிரிவின் விவரங்களை நீங்கள் மாற்றினால்.

கல்வி ஸ்தாபனங்களிலிருந்து நாங்கள் விவரங்களைப் பெற்றாலும் கூட, அது உடனடியாக நிகழக்கூடியதல்ல. அரையாண்டு (செமஸ்டர்) விடுமுறையில் (ஆண்டின் மத்தியில் அல்லது ஆண்டின் முடிவில்) நீங்கள் உங்கள் கல்வியைத் தொடரவேண்டாம் எனத் தீர்மானித்தால், நீங்கள் அதை எங்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும், தயவுசெய்து அடுத்த பருவகால (செமஸ்டரின்) துவக்கம் வரை காத்திருக்காதீர்கள்.

முழுநேரப் படிப்பை நீங்கள் நிறுத்தி விட்டாலும் கூட, நீங்கள் எங்களை உடனுக்குடன் தொடர்பு கொண்டு அது குறித்து எங்களுக்கு தெரியப்படுத்தினால், சில வகையான பணமளிப்புக்கு நீங்கள் இன்னமும் தகுதிபெறக் கூடும்.

**நீங்கள் Youth Allowance ஐப் பெறுகிறீர்களா?**

நீங்கள் Youth Allowance ஐப் பெறுகிறீர்கள் என்றால், பின்வருபவை பற்றி எங்களிடம் கூறவேண்டும்:

- வீட்டை விட்டு வெளியேறினால்
- வீட்டுக்கு திரும்பினால், அல்லது
- உங்கள் பெற்றோர்களில் ஒருவருடன் அல்லது இருவருடனும் நீங்கள் வசிக்கத் துவங்கினால்.

அதோடு, உங்கள் பெற்றோரின் வருமானத்தைப் பொறுத்து உங்களுக்கு பணமளிக்கப்படுகிறது எனில், அதாவது நீங்கள் தனித்து வாழவில்லை என்றால், நீங்கள் பின்வருபவை பற்றியும் எங்களிடம் கூறவேண்டும்:

- உங்களது பெற்றோரின் வருமான விவரங்களில் ஏற்படும் மாற்றம்
- உங்கள் சகோதரர் அல்லது சகோதரி வீட்டை விட்டு வெளியேறுகிறார் அல்லது வீட்டுக்குத் திரும்புகிறார்
- வீட்டிலிருந்து வெளியே வசிப்பதற்காக உங்களுக்கு பணம் வழங்கப்படுகிறது, ஆனால் நீங்கள் வீட்டுக்கு திரும்புகிறீர்கள் (அது தற்காலிகமாய் இருந்தாலும் கூட)
- உங்கள் பெற்றோர்(பெற்றோர்கள்) பிரிகிறார்கள், இணைகிறார்கள் அல்லது மற்றொரு துணையுடன் வாழத்துவங்குகிறார்கள்
- உங்கள் உடன் பிறப்புகளில் ஒருவர் முழுநேர வேலையைத் துவக்குகிறார்
- நீங்கள் ஒரு பெற்றோரிடமிருந்து வெளியேறி மற்றொரு பெற்றோருடன் வாழத் துவங்குகிறீர்கள், அல்லது
- நீங்கள் கல்வி உதவித்தொகைப் பெறுகிறீர்கள் (Student Start-up Scholarship மற்றும் Relocation Scholarship ஐத் தவிர) அல்லது உங்கள் கல்வி சம்பந்தமாக வேறு ஏதேனும் பணமளிப்பைப் பெறுகிறீர்கள்.

## நீங்கள் Family Tax Benefit ஐப் பெறுகிறீர்களா?

நீங்கள் பெறும் குடும்ப உதவித்தொகையைக் கணக்கிட, அதாவது Family Tax Benefit மற்றும் Child Care Subsidy ஆகியவற்றைக் கணக்கிட, உங்களது குடும்ப வருமான மதிப்பீடு பயன்படுத்தப்படுகிறது. உங்களால் முடிந்த அளவுக்கு மிகவும் துல்லியமான குடும்ப வருமான மதிப்பீட்டை நீங்கள் வழங்கவேண்டியது மிகவும் முக்கியமாகும், அப்போது தான் எங்களால் உங்களுக்கு சரியான குடும்ப உதவித்தொகையை அளிக்கமுடியும். உங்கள் மதிப்பீடானது முழு நிதியாண்டுக்குமான உங்கள் குடும்பத்தின் பொருளாதாரச் சூழல்களைப் பிரதிபலிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும். வருமான மதிப்பீடானது அனைத்து ஆதாரங்களிலிருந்தும் ஈட்டப்படும் வருமானத்தை உள்ளடக்க வேண்டும். உங்கள் குடும்பச் சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றத்தையும் நீங்கள் எங்களுக்கு தெரிவிக்க வேண்டும், அதாவது உங்கள் முகவரியில் ஏற்படும் மாற்றம், உங்கள் குழந்தை உங்கள் பராமரிப்பிலிருந்து வெளியேறுகிறது அல்லது பராமரிப்பு ஏற்பாடுகளில் ஏற்படும் மாற்றம், நீங்கள் திருமணம் செய்து கொள்கிறீர்கள் அல்லது பிரிந்து வாழ்ப்போகிறீர்கள் போன்ற தகவல்களை எங்களுக்கு நீங்கள் தெரியப்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** நீங்கள் அல்லது உங்கள் வாழ்க்கைத்துணை வருமானவரியைத் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லையெனில், அது குறித்து நீங்கள் எங்களிடம் கூறவேண்டும்.

## நீங்கள் எப்பொழுது எங்களிடம் இத்தகைய தகவல்களை தெரிவிக்கவேண்டும்

உங்களது வருமானத்தையும், நீங்கள் வழக்கமாக வேலை செய்பவராக இருந்தால், இருவாரங்களுக்கு ஒருமுறை நீங்கள் எத்தனை மணிநேரம் வேலை செய்தீர்கள் (வேலைக்கான ஊதியம் உங்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்றாலும் கூட) என்பதையும் நீங்கள் எங்களிடம் தெரிவிக்க வேண்டும்:

- இருவாரங்களுக்கு ஒருமுறை *Application for Payment* படிவத்தை சமர்ப்பியுங்கள்.
- படிவமின்றி இருவாரங்களுக்கு ஒருமுறை அறிக்கையிடவேண்டும், அல்லது ஒவ்வொரு இரண்டு, நான்கு, ஆறு, எட்டு அல்லது 12 வாரங்களுக்கு ஒருமுறை படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் சூழல்கள் மாறும் போது மட்டும் நீங்கள் அறிக்கையை சமர்ப்பிக்கும் பட்சத்தில், நீங்கள் அதை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

## கடனை திருப்பிச் செலுத்துதல்

நீங்கள் இன்னும் எங்களுக்கு பணம் செலுத்த வேண்டியிருந்தால் நாங்கள் எந்த நேரத்திலும் உங்கள் Centrelink கடன்களை திருப்பிச் செலுத்தச் சொல்லி உங்களைக் கேட்க முடியும்.

உங்கள் கடனை விரைவாக செலுத்துவதற்கு உதவ, Australian Taxation Office (ஆஸ்திரேலிய வரிவிதிப்பு அலுவலகம்) உங்களுக்கு வரும் வரிச் சலுகையை, உங்களுடைய கடனை செலுத்துவதற்கும் எங்களுக்கு அனுப்பலாம்.

நீங்கள் கடன்பட்டுள்ள பணத்தை திருப்பிச் செலுத்தக்கூடிய வேறு வழிகள் உள்ளன. பணம் முழுவதையும் Money You Owe சேவையை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள் அல்லது பணம் செலுத்தும் ஏற்பாடு ஒன்றைச் செய்ய வேண்டும்.

**myGov இணைய வழி ஊடாக Centrelink** என்பதை தேர்ந்தெடுத்து Money You Owe சேவையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

## நீங்கள் Centrelink மூலம் பணத்தைப் பெறாவிட்டாலும் கூட, எங்களுக்கு பணம் கொடுக்க வேண்டியிருக்கும்

உங்கள் சூழ்நிலைகள் மாறும் போது, எங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது முக்கியம். நீங்கள் வேறு ஒரு வீட்டிற்கு இடம்மாறினால், நீங்கள் இன்னமும் எம்மிடம் பணத்தை கடன்பட்டிருந்தால், நீங்கள் இடம் மாறியபின் 14 நாட்களுக்குள் உங்கள் புதிய முகவரியை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

உங்களுக்கு இனி பணம் கிடைப்பதில்லை, ஆனால் Centrelink கடன் இருக்கிறது எனில் உங்களுக்கு வட்டி விதிக்கப்படலாம். நாம் பின்வருவனவற்றை செய்யலாம்:

- வெளிநாட்டிற்கு பயணம் செய்வதிலிருந்து உங்களை தடுத்து நிறுத்தமுடியும்.
- கடன் தொகைககைளத் திருப்பிச் செலுத்த உங்கள் வரிச் சலுகையை Australian Taxation Office இடம் கோரிக்கை விடலாம்;
- உங்கள் ஊதியம் அல்லது சம்பளத்திலிருந்து நீங்கள் பெற்ற கடன் தொகையை திருப்பிச் செலுத்தச் சொல்லி உங்கள் தொழில் வழங்குனரிடம் கோரிக்கை விடலாம்;
- உங்கள் வங்கியில் அல்லது நிதி நிறுவனத்திடம் உங்கள் கணக்கிலிருந்து நீங்கள் செலுத்த வேண்டிய தொகை திருப்பிச் செலுத்த வேண்டுதல் விடுக்கலாம்;
- எங்கள் சார்பில் நீங்கள் பெற்ற கடனைப் பெற்றுக்கொள்ளுவதற்காக வேறு பணம் சேகரிப்பு முகவர்களை நாடக்கூடும்;
- நீங்கள் கடன்பட்ட பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.

நீங்கள் பணம் செலுத்தும் ஏற்பாட்டிற்குள் உள்நுழைந்தால், ஒப்புக் கொண்டபடி பணம் செலுத்துவீர்கள், நீங்கள் வட்டிக்கு கட்டணம் செலுத்த மாட்டீர்கள்.

## எங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது

நீங்கள் உங்கள் விவரங்களை நிர்வகிக்கலாம், உங்கள் வருமானத்தை அறிக்கையில் சமர்ப்பிக்கலாம், உங்கள் கடிதங்களைப் பார்வையிடலாம் மற்றும் அச்சிடலாம், நீங்கள் செலுத்த வேண்டிய பணத்தை திருப்பிச் செலுத்துங்கள் மற்றும் எங்கள் ஆன்லைன் கணக்குகள் அல்லது மொபைல் பயன்பாடுகளைப் பயன்படுத்தி உங்கள் கட்டண விவரங்களை சரிபார்க்கலாம்.

**humanservices.gov.au/onlineguides** என்ற இணைப்பில் பதிவுசெய்து, உங்கள் ஆன்லைன் கணக்கை உபயோகித்து உதவியைப் பெறலாம்.

Centrelink இணையவழிக் கணக்கு அல்லது எமது மொபைல் பயன்பாடுகள் வழியாக பெரும்பாலான ஆவணங்களைச் சமர்ப்பிக்க, **humanservices.gov.au/submitdocumentsonline -**க்குச் செல்லவும்.

எங்கள் மொபைல் பயன்பாடுகளை உபயோகிக்க, உங்கள் ஆன்லைன் கணக்குகளைப் பதிவுசெய்து,

பின்னர் App Store அல்லது Google Play™* யிலிருந்து Express Plus மொபைல் பயன்பாட்டைப் பதிவிறக்கவும்.

myGov வாயிலாக உங்கள் Centrelink, Medicare மற்றும் Child Support ஆன்லைன் கணக்குகளை நீங்கள் அணுகலாம். ஒரு பயனர்பெயர் மற்றும் ஒரு கடவுச்சொல்லை கொண்டு ஒரு பாதுகாப்பான இடத்தில் அரச சேவைகளை ஆன்லைனில் உபயோகிப்பதற்கு myGov ஒரு துரித மற்றும் சுலபமான வழியாகும். **my.gov.au** இல் ஒரு கணக்கை உருவாக்கவும்.

மேலும் தகவலுக்கு **humanservices.gov.au** என்ற பக்கத்திற்கு செல்லவும் அல்லது கீழே தரப்பட்டுள்ள எண்களில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களைத் தொடர்பு கொள்ளவும்:

| | |
|---|---|
| Youth and Students | **132 490** |
| Australian Apprentices | **133 633** |
| ABSTUDY | **Freecall™ 1800 132 317** |
| Indigenous Call Centre | **Freecall™ 1800 136 380** |
| Employment Services | **132 850** |
| Older Australians | **132 300** |
| Disability, Sickness and Carers | **132 717** |
| Families and Parents | **136 150** |
| Centrelink Debt | **Freecall™ 1800 076 072** |
| Indigenous Centrelink Debt | **Freecall™ 1800 138 193** |
| TTY* விசாரணைகள் | **Freecall™ 1800 810 586** |
| ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழிகளில் எங்களுடன் உரையாட | **131 202** |
| National Business Gateway | **131 158** |
| கருத்துக்கள் மற்றும் புகார்கள் | **Freecall™ 1800 132 468** |
| TTY* Customer Relations Line காதுகேளாதோர் அல்லது கேட்கும்திறன் அல்லது பேச்சுத்திறனில் குறைபாடுள்ளவர்களுக்காக மட்டுமே *TTY உள்ளது. இச்சேவையைப் பயன்படுத்த ஒரு TTY தொலைபேசி (ஃபோன்) தேவை. | **Freecall™ 1800 000 567** |
| Department of Human Services Fraud Tip-off Line | **131 524** |

## மேலும் தகவலுக்கு

- **humanservices.gov.au** இணையதளத்திற்கு சென்று, ஆங்கிலத்தில் மேலும் தகவல்களை பெற 'owing money' எனத் தேடுங்கள்

- **humanservices.gov.au/yourlanguage** தளத்திற்கு சென்றால் தகவல்களை உங்கள் மொழியிலேயே படிக்க, கேட்க அல்லது பார்க்க முடியும்
- **humanservices.gov.au/forms** தளத்திற்கு சென்று ஆங்கிலத்தில் எங்கள் படிவங்களின் பட்டியலைப் பாருங்கள்
- Centrelink கட்டணங்கள் மற்றும் சேவைகள் பற்றி உங்கள் மொழியில் எங்களிடம் பேச **131 202** க்கு அழைக்கவும்
- Medicare மற்றும் Child Support கட்டணங்கள் மற்றும் சேவைகள் பற்றி உங்கள் மொழியில் பேச **131 450** எனும் எண்ணில் Translating and Interpreting Service (TIS National) க்கு அழைக்கவும்.

குறிப்பு: அவுஸ்திரேலியாவில் எங்கிருந்தும் '13' எண்களுக்கு உங்கள் வீட்டுத் தொலைபேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு ஒரு நிலையான விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த அழைப்பு விகிதம் உள்ளூர் அழைப்பு விலையில் மாறுபடும், மேலும் தொலைபேசி சேவை வழங்குநர்கள் இடையேயும் மாறுபடலாம். உங்கள் வீட்டுத் தொலைபேசியில் இருந்து '1800' எனும் எண்களுக்கு செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொது தொலைபேசி மற்றும் மொபைல் போன்களில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு மிக அதிக விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

## துறைவுரை (உரிமை கோராமை)

இவ்வெளியீட்டில் உள்ள தகவல்கள் யாவும், பணமளிப்புகள் மற்றும் சேவைகளுக்கு ஒரு வழிகாட்டியாக உபயோகிப்பதற்கு மட்டுமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணமளிப்புக்காக விண்ணப்பிப்பது மற்றும் உங்கள் குறிப்பிட்ட சூழல் தொடர்பான பணமளிப்பைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா எனத் தீர்மானிப்பது முற்றிலும் உங்கள் பொறுப்பாகும்.

# Avoid a debt

## What should I do if my circumstances change?

If you receive a Centrelink payment you need to tell us about your income and any changes in your circumstances. This is so we can make sure you get the correct payment amount and do not get overpaid.

**Note:** people who deliberately give false information also risk prosecution and a criminal record. The department verifies income with employers, and matches information with the Australian Taxation Office, the Department of Home Affairs and other government agencies and providers of employment services.

## Income

Tell us:

- if you start or stop work
- the number of hours you work and if these hours change
- if the work is full-time, casual or part-time
- your earnings/income before tax and other deductions
- any income you get from outside of Australia, or
- your partner's earnings/income before tax (if you have a partner).

## Self-employed

Tell us if:

- you are self-employed or involved in a business or company
- your business or company income changes from what you have previously advised us (usually known when you complete the annual income tax return)
- you are a beneficiary of a trust (including family trust), or
- there is an increase or decrease to your previous year's taxable income.

You need to provide ongoing Profit and Loss Statements every three months (or when otherwise advised by us) until you are able to provide a tax return.

**Note:** please keep all your payslips for your own reference and for our review and verification purposes.

If you are receiving a working age payment an additional 10% penalty, called Recovery Fee, may apply where you have been overpaid and you have not told us about your income or you have knowingly provided false or misleading information.

## Changes in your circumstances

Tell us if:

- you change your address
- you get married, start to live in a marriage-like relationship, separate or reconcile

- there is a change in the amount of rent, board, or lodgings you pay
- you are leaving Australia temporarily, permanently or studying overseas
- children leave your care or come into your care
- your child care arrangements change
- your child earns income above the allowable limit (ask us what the limit is)
- you receive a lump sum payment
- you or your partner receive a payment for leave entitlements or a redundancy payment
- you receive income from any other source
- your assets change
- your caring arrangements change or cease (if you are paid by us as a carer), or
- your child stopped studying.

## Other things you might need to know

**Are you a student?**

If you are a student, you need to tell us if you have:

- stopped studying
- changed the number of hours you are studying
- changed courses
- changed educational institutions, or
- changed your course details.

Although we obtain information from educational institutions, this may not happen immediately. If you decide in the semester break (either mid-year or end-of-year) not to return to your studies, you must tell us straight away and not wait until the start of the next semester.

If you stop studying full-time, you may still be eligible for some type of payment if you contact us straight away.

**Do you receive Youth Allowance?**

If you are paid Youth Allowance you need to tell us if you:

- leave home
- return home, or
- start living with one or both of your parents.

In addition, if you are paid subject to your parents' income—that is, you are not independent—you should also tell us if:

- your parents' income details change
- you have a brother or sister who leaves or returns home
- you are paid an away from home rate and you return home (even temporarily)
- your parent(s) separate, reconcile or become partnered
- one of your siblings start full time work
- you change the parent you are living with, or
- you receive a scholarship (excluding the Student Start-up Scholarship and the Relocation Scholarship) or any other payments relating to your studies.

## Do you receive Family Tax Benefit?

Your family income estimate is used to work out how much family assistance you get, like Family Tax Benefit and Child Care Subsidy. It is important that you give us the most accurate family income estimate you can, so we can pay you the right amount of family assistance. Your estimate should reflect your family's financial circumstances for the whole financial year. The income estimate should include income from all sources. You also need to tell us if your family circumstances change, for example, you change address, your child leaves your care or care arrangements change, you become partnered or separate.

**Note:** you should tell us if you, or your partner, are not required to lodge a tax return.

## When you need to notify us

You must tell us your income and your hours worked, in the fortnight in which you work (even if you have not been paid yet), if you usually:

- lodge a fortnightly Application for Payment form
- report fortnightly but without a form, or lodge a form every two, four, six, eight or 12 weeks.

If you only report when your circumstances change, you must do so within 14 days.

## Paying back the money you owe

If you owe us money we can ask you to pay off your Centrelink debts at any time.

To help you pay off your debt faster, the Australian Taxation Office may send us your tax refund to pay your debt.

There are different ways you can repay the money you owe. Use the Money You Owe service to pay the amount owed in full, or to set up a payment arrangement.

Sign in to your **Centrelink online account** through **myGov** and select Money You Owe.

## If you no longer receive a Centrelink payment but owe us money

It is still important to tell us when there's a change to your circumstances. If you move house and you still owe us money, you need to tell us your address within 14 days after you move.

If you no longer receive a payment and have a Centrelink debt you could be charged interest. We may also:

- stop you from travelling overseas;
- ask the Australian Taxation Office to give us your tax refund to repay the amount owed;
- ask your employer repay the amount you owe from your wage or salary;
- ask your bank or financial institution to repay the amount you owe from your account;
- ask an external collection agent to collect the amount you owe on our behalf;
- take legal action to enforce repayment of the money you owe.

If you have entered into a payment arrangement and you are making the payments as agreed, you will not be charged interest.

## How to contact us

You can manage your details, report your income, view and print your letters, manage the repayments of the money you owe and check your payment details using our online accounts or mobile apps.

Get help with registering and using your online account at **humanservices.gov.au/onlineguides**

To submit most documents through a Centrelink online account or our mobile apps, go to **humanservices.gov.au/submitdocumentsonline**

To use our mobile apps, register your online accounts and then download an Express Plus mobile app from the App Store or Google Play™*.

Access your Centrelink, Medicare and Child Support online accounts through myGov. myGov is a fast simple way to use government services online with one username, one password and in one secure location. Create an account at **my.gov.au**

For more information in English go to **humanservices.gov.au** or call the relevant number below:

| | |
|---|---|
| Youth and Students | **132 490** |
| Australian Apprentices | **133 633** |
| ABSTUDY | **Freecall™ 1800 132 317** |
| Indigenous Call Centre | **Freecall™ 1800 136 380** |
| Employment Services | **132 850** |
| Older Australians | **132 300** |
| Disability, Sickness and Carers | **132 717** |
| Families and Parents | **136 150** |
| Centrelink Debt | **Freecall™ 1800 076 072** |
| Indigenous Centrelink Debt | **Freecall™ 1800 138 193** |
| TTY* enquiries | **Freecall™ 1800 810 586** |
| To speak to us in languages other than English | **131 202** |
| National Business Gateway | **131 158** |
| Feedback and complaints | **Freecall™ 1800 132 468** |
| TTY* Customer Relations Line<br>*TTY is only for people who are deaf or have a hearing or speech impairment. A TTY phone is required to use this service. | **Freecall™ 1800 000 567** |
| Department of Human Services Fraud Tip-off Line | **131 524** |

## For more information

- go to humanservices.gov.au and search 'owing money' for more information in English

- go to **humanservices.gov.au/yourlanguage** where you can read, listen to or watch information in your language
- go to **humanservices.gov.au/forms** for a list of our forms in English
- call **131 202** to speak with us in your language about Centrelink payments and services
- call the Translating and Interpreting Service (TIS National) on **131 450** to speak with us in your language about Medicare and Child Support payments and services

**Note:** calls from your home phone to '13' numbers from anywhere in Australia are charged at a fixed rate. That rate may vary from the price of a local call and may also vary between telephone service providers. Calls to '1800' numbers from your home phone are free. Calls from public and mobile phones may be timed and charged at a higher rate.

## Disclaimer

The information contained in this publication is intended only as a guide to payments and services. It is your responsibility to decide if you wish to apply for a payment and to make an application, with regard to your particular circumstances.